
# Word Of Christ

# கிறிஸ்துவின் வசனம்




ஆசிரியர்

B. அர்ச்சுனன்

★ சென்ற மாத இதழின் விடைகள்:

1. யோவாஸ் நியா 6:31
2. யோசேப்பு சேப்பு 21:12
3. கிறிஸ்துவுக்குள் எபே 1:9
4. கூட்டுகிறதுமில்லை கலா 3:15
5. பலன் கொலோசெ 1:6
6. தாவீது
7. மெய்ப்பலனை
8. இல்லை
9. மூன்று முறை
10. ஒசேநசிப்போரு

★ சென்ற மாத இதழின் வெற்றி பெற்றவர்கள்:

1. G. தமிழரசன் தேவலாம்பாளையம்
2. R. பெருமாள் கோசி
3. C. கனகவல்லி M. ராமசந்திரபுரம்
4. S. எஸ்தர்ராணி தூத்துக்குடி
5. N. டேனியல் தமிழ்வாணன் வேல்லிஷாரம்
6. S. ரேச்சல் அமுதமணி வேல்லிஷாரம்

★ இம்மாத வேத அறிவுப் போட்டி:

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும், கடைசி ஐந்திற்கு விடைமட்டும் வேதத்திலிருந்து எழுதி இம்மாதம் 25ம் தேதிக்குள் உங்கள் பதிவு எண் மற்றும் பின்கோடுடன் உங்கள் முகவரியை ஆங்கிலத்தில் எழுதி அனுப்பிவைக்கவும்.

1. யாருடைய கூடாரங்களில் செல்வமுண்டு?
2. எக்காளத்தின் சத்தத்தைக் கேட்டும், எச்சரிக்கையாயிருக்கவில்லையென்றால் அவனுடைய இரத்தப்பழி எவன் பேரிலே சுமரும்?
3. யோவான்ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் பரலோகராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது; எவர்கள் அதைப்பிடித்துக் கொள்ளுகிறார்கள்?
4. புறஜாதியார் இரட்சிக்கப்படுவதற்கு நாங்கள் அவர்களோடே பேசாதபடிக்கு தடைபண்ணுகிறார்கள் என்று பவுல் யாரைக் குறிப்பிடுகிறார்?
5. சகோதரரே, நீங்கள் நிலைகொண்டு, வார்த்தையினாலாவது, நிருபத்தினாலாவது நாங்கள் உங்களுக்குள் உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள் என்றது யார்?
6. காணாமற்போன கழுதைகளைத் தேடப்போய், தைலக்குப்பியினால் அபிஷேகம் பெற்று வந்தவன் யார்?
7. எழுபது இராஜாக்களின் கை கால்களின் பெருவிரல்களைத் தறித்துப்போட்ட எனக்கும் அப்படியே தேவன் செய்து சரிக்கட்டினார் என்றவன் யார்?
8. ஆயி பட்டணம் தோல்விக்குக்காரணமாயிருந்தவன் யார்?
9. இளவயது விதவைகள் முதலில் கொண்டிருந்த விசுவாசத்தை விடுவதினாலே எதற்குட்படுவார்கள்?
10. நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள்; இதோ நியாயாதிபதி எங்கே நிற்கிறார்?

★ வாசகர்கள் கவனத்திற்கு!

சென்ற இதழில் அச்சுப் பிழைகள் அதிகமாக வந்து விட்டது அதைசரிசெய்யாமல் வெளியிட்டு விட்டோம் அதற்காக மனம் வருந்துகிறோம்.

கிறிஸ்துவின் வசனம்

WORD OF CHRIST

மலர் 5 ஏப்ரல் 1997 கனி 9


# கிறிஸ்தவ ஜீவியம்

## Christian Living

கிறிஸ்தவ ஜீவியம் என்பது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு இணைந்து, அவருடைய வார்த்தைக்குச் செவிகொடுத்து ஜீவிக்கும் ஒரு ஜீவியமாகும். இது ஒரு விசுவாச ஜீவியம், ஆவிக்குரிய ஜீவியம், முன்மாதிரியான ஜீவியம், நம்பிக்கையின் ஜீவியம், கீழ்படிதலின் ஜீவியம், வெற்றியுள்ள ஜீவியம், ஆசீர்வாதமான ஜீவியம் போன்ற அம்சங்களைக் கொண்டிருக்கிறது. பரிசுத்த வேதகாமத்தில் அப் 10:35 ல் பேதுருவின் பிரசங்கத்தைக் கவனித்துப்பாருங்கள் '' எந்த ஜனத்திலாகிலும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச்செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் என்கிறார். பிரியமானவர்களே! இவ்வுலகத்தில் யார் வேண்டுமானாலும் இயேசு கிறிஸ்துவை தம்சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு நீதியைச்செய்து கொண்டு அவருக்கு உகந்த ஒரு கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவிக்கலாம் அப்படி ஜீவிக்கும் போது நாம் இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இருப்போம்

இது ஒரு விசுவாச ஜீவியம்;விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம். ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் எபி 11:6 ஆம் பிரியமானவர்களே! நம்முடைய முற்பிதாக்களும் அப்படியே விசுவாசித்து தேவ பெலனைப்பெற்றுக்கொண்டார்கள். அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது கலாத் 3:6. விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்புப் பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன்குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டு பண்ணினான்; அதினாலே ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினால் உண்டாகும் நீதிக்குச் சுதந்திரவாளியானான் என்று எபி 11:7ல் பார்க்கின்றோம். அதைப்போல் நாமும் கிறிஸ்தவ ஜீவியத்தில் விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.

ஆவிக்குரிய ஜீவியம்: பொதுவாக மனிதர்கள் மாமிசத்திற்கு
முக்கியத்துவம் கொடுத்து முகஸ்துதி செய்து உயர்ந்தவன், தாழ்ந்த
வன் என்ற பாகுபாடோடு இன்றைய நாட்களிலும் ஜீவித்து வருகிறா
ர்கள் .மனிதன் முகத்தைப் பார்க்கிறான், தேவனோ இருதயத்தைப்
பார்க்கிறார். மாம்சத்துக்கு உட்பட்டவர்கள் தேவனுக்குப்பிரியமாயி
ருக்க மாட்டார்கள் காரணம் என்னவென்றால், மாமிசத்துக்குட்பட்ட
வர்களிடத்தில் கிறிஸ்துவின் ஆவியில்லை. ஆகையால் தங்களுடைய
சிந்தையின்படியே நடந்து மாமிச இச்சைகளை நிறைவேற்றுகிறார்
கள். அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய
ஆவி உங்களில் வாசமாயிருந்தால் ,கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து
எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே
சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். ஆகையால்,
சகோதரரே! மாமிசத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாமிசத்துக்குக்
கடனாளிகளல்ல மாமிசத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினா
லே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள் ரோ 8:11-13
கிறிஸ்தவ ஜீவியத்தில் அநேகர் சரீரத்தின் செய்கைகளை அழிக்காமல்
வீழ்ந்து போகிறார்கள். ஆனால் கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள்
மாமிசத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில்
அறைந்திருக்கிறார்கள் என்று கலா 5:24ல் பவுல் குறிப்பிடுகிறார்,

முன்மாதிரியான ஜீவியம்: தேவனை அறியாதவர்கள் மத்தியில்
நாம் முன்மாதிரியான ஜீவியத்தை ஜீவிக்கவேண்டும். ஆதி
கிறிஸ்தவர்கள் இப்படியே ஜீவித்து மாதிரியை வைத்துப்
போயிருக்கிறார்கள். அவர்கள் அப்போஸ்தலர்களுடைய,
உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும்
ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருந்தார்கள் அப் 2:42 உப
தேசத்திற்கும், அந்நியோந்நியத்திற்கும், அப்பம் பிட்குதலுக்கும் ஜெப
த்திற்கும் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து உறுதியோடிருந்திருக்
கிறார்கள். ஆனால் நம்மில் அநேகர் இப்படி ஒரு முன்மாதிரியில்லா
மல் ஜீவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆதிகிறிஸ்தவர்கள் மகிழ்ச்சி
யோடும், கபடமில்லாத இருதயத்தோடும் சபையாகக் கூடி தேவனை
ஆராதித்து வந்தார்கள் மேலும் கிறிஸ்துவின் வருகைக்காகக்
காத்திருந்தார்கள் இதோ, சீக்கிரமாய் வருகிறேன் ஒருவனும் உன்
கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்
கொண்டிரு ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவ
னுடைய ஆலயத்திலே தூணாக்குவேன் வெளி 3:11,12 ஆனபடியால்
நாமும் கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தப்பட்டு, நமக்கு மாதிரியாக
வைக்கப்பட்டுள்ள இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்று
வோமாக!

நம்பிக்கையின் ஜீவியம்: கிறிஸ்தவனாக ஜீவிக்கும் போது நிலையான நகரத்தை தேவன் நமக்குக் கொடுப்பார் என்ற ஒரு நிச்சயத்தோடு இருக்கவேண்டும். இதைக்குறித்துபவுல் குறிப்பிடும் போது பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும் தேவனால் கட்டப்பட்ட கைவேலையில்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம் என்கிறார் II கொரி 5:1 ஆகையால் நாம் ஒரு நிச்சயத்தை உடையவர்களாக இருக்கிறோம் மேலும் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாக சிலம்பம் பண்ணேன் என்றார். இந்த நம்பிக்கை கிறிஸ்தவ ஜீவியத்தில் ஒரு முக்கிய அம்சமாக இருக்கிறது. நாம் எங்கிருந்து வந்தோம், நாம் என்ன செய்கிறோம், நாம் எங்கே போவோம் என்ற நிச்சயமில்லாத வாழ்க்கையை அநேகர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மத்தியில் அசைவில்லாத இராஜ்யத்தைப் பெறக்கூடிய நாம் I பேது 3:15 ல் பேதுரு சொல்வதைப் போல் உங்களில் இருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிறயாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

கீழ்படிதலின் ஜீவியம்: விசுவாசத்தினாலே ஆபிரகாம்தான் சுதந்திரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்ட போது, கீழ்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான் எபி 11:8 மேலும் விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோட ஏற்றுக்கொண்டு,கீழ்படியாதவர்களோடே கூடச்சேதமாகாதிருந்தாள் பின்னும் நான் என்ன சொல்லுவேன்? கிதியோன்,பாராக்,சிம்சோன் எப்தா,தாவீது, சாமுவேல், என்பவர்களையும், தீர்க்கதரிசிகளையுங் குறித்து நாம் விவரம் சொல்ல வேண்டுமானால் காலம் போதாது எபி 11.31-32, ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்படியும்முன் நாம் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தோம் ஆனால் இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய் கீழ்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம் கிறிஸ்தவ ஜீவியத்தில் நாம் தேவனுக்கு அடிமைகளானதினால்,பரிசுத்தமாகுதல் உங்களுக்குக்கிடைக்கும் பலன்,முடிவோ நித்திய ஜீவன் ரோம 6:22,

வெற்றியுள்ள ஜீவியம்: சங்கீதக்காரனாகிய தாவீது சொல்வது போல் நான் சாவாமல் பிழைத்திருந்து கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன் சங் 118:17. உறுதியுள்ளவர்களாக இருந்து நமக்கு வரும் எதிர்ப்புகளை வேதவசனத்தை கொண்டு ஜெயித்து வெற்றி நடைபோடவேண்டும். நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை, கலக்கமடைந்தும்

மன முறிவடைகிறதில்லை, துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை கீழ் தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை II கொரி 4:8,9. அவ்விதமாகவே நம்முடைய விசுவாசத்தை உறுதிப்படுத்திக் கொண்டு தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் 1யோ 5:4 என்ற வசனத்திற்கேற்ப உலகத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் உதறித்தள்ளி வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழவேண்டும். இயேசுவானவர் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்? 1யோ 5:5. ஆகவே தேவ வசனத்தைப்பிடித்துக் கொண்டு கிறிஸ்தவ ஜீவியத்தில் வெற்றி நடை போடுவோம்.

ஆசீர்வதமான ஜீவியம்: கர்த்தரை, தங்களுக்கு தெய்வமாகக் கொண்ட ஜாதியும், அவர் தமக்கு சுதந்திரமாகத்தெரிந்து கொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது என்று சங் 33:12ல் வாசிக்கின்றோம் நம்மை உண்டாக்கினவரை இப்பூமியில் தெரிந்து கொள்வதே நிலையான ஆசீர்வாதம், ஓ, தாகமாயிருக்கிறவர்களே நீங்கள் எல்லோரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள் என்று ஏசாயா அழைப்பது போல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதலைக் கொடுப்பேன். மேலும் நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகம் உண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள் நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார் யோ 4:14 இந்த ஆசீர்வதமான ஜீவியத்தை கிறிஸ்தவ ஜீவியத்தில் நிலைத்திருந்து பெற்றுக்கொள்ளுங்கள்,

கிறிஸ்தவ ஜீவியமானது இவ்வகையான அம்சங்களை ஒருங்கே அமையப் பெற்றிருப்பதால் அவைகளில் நிலைத்து, ஜீவனுள்ள நாளெல்லாம்சந்தோஷத்தோடும்,நம்பிக்கையோடும் உற்சாகதோடும் கர்த்தருக்குப் பிரியமாய் ஜீவித்து நமக்கு வைக்கப்பட்டிருக்கிற ஜீவ கிரீடத்தைப் பெற்றுக்கொள்வோமாக!.

# செல்வாக்கு

## Influence

ஏவாள் ஏதேன் தோட்டத்தில் விலக்கப்பட்ட கனியை பறித்து தானும் புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்ததாக வேதாகமத்தில் பார்க்கிறோம். ஏவாளின் செல்வாக்கிற்கு ஆதாம் பலியாகி தானும் விலக்கப்பட்டகனியை புசித்த பாவத்திற்குள்ளாகி. அதன் பிரதிபலன் மனுக்குலத்தை பாதிக்கும்படி நடந்தான். சமுதாயத்தை பாதிக்கும்

பணியில்பெண் செயல்படுவது இது தான் முதல் முறை.ஒரு
ஆணிடத்தில் தனக்கிருந்த பெரிய செல்வாக்கையே ஏவாள் தன்
செயலின் மூலம் வெளிப்படுத்துகிறாள். ஆணுடைய விலாவிலிருந்து
எடுக்கப்பட்டவள் ஆதாம் அவளுக்கு, ஏவாள் என்று பெயரிட்டான்
அதன் பொருள் மனிதனை உருவாக்க, முழுமையாக்க, அர்த்தப்படுத்த
படைக்கப்பட்டவள். இங்கு அவளுடைய ஊழியத்தின் சிறப்பு
விளங்குகிறது. இதை நிறைவேற்ற அவள் தன் செல்வாக்கை பயன்
படுத்தி மனிதனை உருவாக்க வேண்டியவளாக இருக்கிறாள்

வேதாகமத்திலே,ஆணிடத்தில் தன் செல்வாக்கை பயன்படுத்தும்
பெண்கள் வரிசையில் ஏவாளே முதல் இடம் பெறுகிறாள். அடுத்தப
யாக அடிமை பெண்ணாகிய ஆகார் விஷயத்தில் சாராளும் தன்
புருஷன் மீது செல்வாக்கை பயன்படுத்தினுள் இருப்பினும் அவனுக்கு
ஆபிரகாம் ஆண்டவராக இருந்தார். தெலிலாள் தன் கெட்ட
செல்வாக்கை சிம்சோன் மீது பயன்படுத்தி அவன் வீழ்ச்சிக்கு
காரணமாயிருந்தாள். சரியான இடத்தில் அன்பு செலுத்தப்படா
விட்டாலும் ஒரு பெண்ணின் சக்தி எவ்வளவு பெரியது என்று
பாருங்கள். சாலமோனை அரச பதவியில் அமர்த்த பத்சேபாள் தாவீது
மீது செல்வாக்கை பயன்படுத்தினுள். இஸ்ரவேலை பாவம் செய்யும்படி
கொடுமைக்காரியான யெசபேல்,ஆகாபின் மீது செல்வாக்கை பயன்
படுத்தினுள். அரசியலிலும் மதவிஷயத்திலும் இவளுக்கு எப்பேர்பட்ட
செல்வாக்கு இருந்திருக்கவேண்டும், ஏரோதியாள் தன் செல்வாக்கு
பயன்படுத்தி யோவான் ஸ்நானகனே சிரச்சேதம் செய்தாள். தேவன்
செல்வாக்கை பெண்களுக்கு கொடுத்திருந்தும், அவற்றை தங்கள்
சுய சித்தத்திற்கு பயன்படுத்தாமல் சமுதாயத்தை உருவாக்கும்
பணியில் உபயோகிக்கவே விரும்புகிறார்.

இன்று சமுதாயம் இவ்வளவு சீர்குலேந்து ஒழுக்கங் கெட்டு
இருப்பதற்கு பல காரணங்கள் இருப்பினும், முதன்மையான
காரணமாக, பெண்கள் தங்கள் செல்வாக்கை பயன்படுத்தி
சமுதாயத்தை உருவாக்கும் பணியில் தங்கள் கடமையை செய்ய
முன் வராததே என்று கூறுவேன் அது எப்படி என்றால். இன்றைய
குழந்தைகள் தான் வருங்கால சமுதாயத்தில் முக்கிய பங்கை ஏற்கப்
போகிறவர்கள். இந்த குழந்தைகள் எவ்வாறு உருவாக்கப்
படுகிறுர்களோ அதைப்பொருத்தே வருங்கால சமுதாயத்தின்
முன்னேற்றம் இருக்கும்.

உதரணமாக, வேதகாமத்தில் யாக்கோபு ஒரு சூழ்ச்சிகாரனாக
தன் தாயாகிய ரெபெக்காளால் உருவாக்கப்படுகிறான். ஒரு குடும்பத்
தில் தகப்பன் ஒரு பிள்ளையும்,தாய் ஒரு பிள்ளையும் பிடித்தமானவர்
களாக வைத்திருப்பது எவ்வளவு பயங்கரம். ரெபெக்காள் அழகுள்ள
வள், தேவனுடைய சித்தத்தின்படி ஒரு புதியவனே திருமண செய்ய.

மற்றொரு அந்நியனோடு கூடச் செல்ல எவ்வளவு தைரியம் இருந்தது இருப்பினும் தன் மகன் யாக்கோபை ஒரு உயர்ந்த மனிதனை உருவாக்காமல், அவனை தனக்கு பிடித்தமானவனாக வைத்திருந்தாள் தாயைப்போலவே மகனும் பேராசையுள்ள சூழ்ச்சிக்காரனாக மாறினான் ஆகையினால் தான் அந்த சாபம் என் மீது சுமரட்டும் என்றாள், இன்றைய சமுதாயம் இவ்வளவு ஒழுக்கங்கெட்டிருப்பதற்கு தாய்மார்கள், தங்கள் கடமையை சரிவர செய்யாததே. வெறும் பிள்ளைகளை பெற்று விட்டால் மாத்திரம் போதாது. தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை என்பதற்கிணங்க, தாய் தான் பிள்ளைகளை உருவாக்குபவளாக இருக்கிறாள். தகப்பனுக்கு இதில் பங்கில்லை என்று நான் கூறவில்லை பிள்ளை பிறந்து வளரும் ஆரம்ப கட்டத்தில் உருவாக்கும் பணி, தாய் குலத்திற்கே சேரும். என்ன வித்தை அந்த குழந்தைப் பருவத்திலே போடுகிறார்களோ, அதைப் பொறுத்தே வளர்ந்து மாறவேண்டியவனாக இருக்கிறான்.

ரோம சக்கரவர்த்தி நீரோ மன்னனின் தாய் ஒரு கொலைகாரி அவள் மகனும் அவளை ஒரு நாள் கொன்று விடுகிறான். இன்றைய சமுதாயத்தில் நாகரீகத்தின் வெறி தலைவிரித்தாடும் இந்நாட்களில் நல்ல பெண்களை காண்பது அரிது. தொட்டிலாட்டும் கை தான் உலகை ஆளும் என்ற முதுமொழிக்கிணங்க தாயானவாளே பிள்ளைகளை உருவாக்குகிறவர்களாக வருங்கால சமுதாயத்திற் கேற்றவனாக படைக்க வேண்டிய முக்கிய பொறுப்பில் இருக்கிறாள் இது தானாக செயல்படும் என்று இருந்துவிட்டால் முடியாது. 24 மணி நேரமும் இதற்காக தங்கள் உடல் ,பொருள், ஆவி, ஊண், உறக்கம் இவைகளை தத்தம் செய்து உருவாக்க வேண்டிய காரியம். இதற்குத் தான் தாய் வீட்டில் தரித்திருக்கவேண்டும். தன் குழந்தைகளை வேலைக்காரியின் கையில் கொடுத்துவிட்டு, கிளப், சினிமா, அலுவலகம் என்று ஊர் சுற்றித் திரிந்தால் எப்படிப்பட்ட சமுதாயம் உருவாகும் என்று பாருங்கள் அப்பொழுது யாருக்கு லாபம்? பிசாசுக்குத் தான்.

அன்புள்ள சகோதரியே வீட்டுக்கு திரும்பி சொல். தேவன் பிள்ளைகளை உருவாக்கும் அந்த பொறுப்புக்கு உங்களை அழைக்கிறார் இவை எல்லாவற்றிற்கும் அஸ்திபாரமாக விளங்குவது கிறிஸ்தவ இல்லம் அந்த இல்லத்தில் புருஷனும் மனைவியும் கிறிஸ்தவர்களாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்து ஜீவித்து பவுல் கூறிய புத்திமதி எல்லா கணவன் மனைவியை நேசித்து. மனைவி தன் கணவனுக்கு பிரகாரம் காரியத்திலும் கீழ்படிந்து, பெற்றோரும் பிள்ளைகளை கோபப் படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்த்து பிள்ளைகள் பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்படிந்து, இப்படிபட்ட சூழ்நிலையில் பிள்ளைகள் உருவாக்கப்பட்டால் தான் புதியதொரு சமுதாயத்தை உருவாக்கமுடியும் பெற்றோர்கள் செய்யுங்

பெரிய தவறு தம்பிள்ளைகளின் எதிர்கால [illegible] அலட்சியமாக பெற்றோர் எண்ணக்கூடாது. [illegible] முன்னமே இப்படிப்பட்ட ஈனமான நிலையை கண்டு [illegible] சனங்களைப்பார்த்து, எரேமியா தீர்க்கதரிசி கூறியது, ஐயோ! தங்கத்துக்கொப்பான விலையேறப்பெற்ற சீயோன் குமாரர் குயவனுடைய கைவேலையான மண்பாண்டங்களாய் எண்ணப்படுகிறார்களே

இல்லத்தில் கிறிஸ்து மகிமைப்படுத்தப்பட்டு தேவனுடைய வார்த்தையால் அலங்கரிக்கப்படவேண்டும், அவருடைய வசனத்தை மதித்து செயல்படுபவர்களாக இருக்க வேண்டும். பெற்றோர் பிள்ளைகள் முன்பாக ஒருமாதிரி ஜீவியத்தை ஜீவிக்கிறவர்களாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் தன்னையுமறியாது குழந்தைகள் தகப்பனுடைய கெட்ட மாதிரியைப் பற்றிக்கொள்ளும். அதை விடுவதென்பது சுலபமான காரியம் அல்ல. பெற்றோர் பொறாமை குரோதம், பகையுணர்ச்சி, வைராக்கியம் போன்ற தீய உணர்வுகளுக்கு ஒப்புக்கொடுத்து நடப்பதை குழந்தைகள் பார்த்து அது கெட்ட சுபாவம் என்பதை அறியாமல் அந்த பிஞ்சு உள்ளத்தில் ஏற்றுக்கொள்வார்களேயானால், பெரியவர்களாகும்பொழுது அதே சுபாவத்தை தங்கள் ஜீவியத்தில் வெளிப்படுத்துவார்கள். சிறு பிள்ளைகள் தானே ஆகட்டும், இப்பொழுது போகட்டும் பெரியவர் ஆனபிறகு திருத்திக்கொள்ளலாம் என்றால் இதன் பிரதிபலனை நிச்சயமாக அனுபவிப்போம். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? இன்றே ஆரம்பமாக வேண்டும். இதுவே தருணம்.

பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியில் அவனை நடத்து அவன் முதிர்ந்த வயதிலும் அதை விடாதிருப்பான் என்றார் ஞானி சாலமோன் அதற்கு தான் பெற்றோர்கள் முதலில் தேவனுடைய பிள்ளைகளாக உண்மை கிறிஸ்தவர்களாக இருக்கவேண்டும் பின்பு வேதவசனப்படி, கிறிஸ்தவ இல்லத்தை அமைக்கவேண்டும் தினசரி குடும்ப ஜெபம் செய்ய வேண்டும் கிறிஸ்துவை மகிமைபடுத்தி அவருடைய போதனைகளின் பிரகாரம் இல்லத்தில் உள்ள ஒவ்வொருவரும் நடக்க வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் பிள்ளைகள் உருவாக்கப்பட வேண்டும். இது ஒன்று தான் வளமான சமுதாயத்திற்கு ஒரே நம்பிக்கை.

அன்புள்ள சகோதரரே! உன் இல்லம் ஒரு கிறிஸ்தவ இல்லறமா? நீ தேவனுக்கு கீழ்படித்திருக்கிறாயா அவருடைய போதனைகளை கடைபிடித்து நடக்கிறாயா? புதிய ஏற்பாட்டில் எலிசபெத்சகரியா தம்பதிகளைபார் ..அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின் படியேயும் நியமங்களின் படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து,

தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள் நீயும் கர்த்தரிட்ட கற்பனைகளின் படி நட, நீ உன் பிள்ளைகளுக்கு முன்பாக நீதிமானாக இரு. அவர்களை உருவாக்கும் மகத்தான பொறுப்பை தேவன் உனக்கு கொடுத்திருக்கிறார். நீ என்ன செய்யப்போகிறாய்? முதலில் உன்னை தேவனுக்கு ஒப்பு கொடு கர்த்தர் உன்னோடு இருந்து உன்முயற்சியை ஆசீர்வதிப்பார்.

P.R Swamy
Bangalore

---

## பெண்கள் பகுதி

### அவளது வீட்டு உபசரிப்பில்
### In the Hospitality of Her Home

அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள், அதினாலே சிலர் அறியாமல் தேவ தூதரையும் உபசரித்ததுண்டு (எபி 13:5) சரித்திரம் முழுவதிலும், உபசரிப்பானது மரியாதைக்குரியதாகவும், சுயநலமற்றதாகவும் கருதப்பட்டுவருகிறது.

ஒரு நாள் ஆபிரகாமின் கூடாரம் வழியாக மூன்று புருஷர்கள் கடந்து சென்று கொண்டிருந்தனர். ஆபிரகாம் அவர்களைக் கண்டவுடனே, கூடாரவாசலிலிருந்து அவர்களுக்கு எதிர்கொண்டு ஓடி தரைமட்டும் குனிந்து உமது அடியேனை விட்டுக் கடந்து போக வேண்டாம். உங்கள் கால்களைக் கழுவி மரத்தடியில் இளைப்பாறிக் கொண்டிருங்கள் என்றான். பின்பு அவன் தீவிரமாய் சாராளிடத்திற்கு போய் அவர்களுக்கு அப்பம் சுடும்படி துரிதப்படுத்தினான் ஆபிரகாம். தானே மாட்டு மந்தை ஒடி ஒரு நல்ல இளங்கன்றைப்பிடித்து வேலைக்காரன் கையிலே அதை சமைக்கும் படி கொடுத்து சமைத்த கன்றையும், பின்பு வெண்ணையையும், பாலையும் முன்பாக வைத்து அவர்கள் அருகே மரத்தடியில் நின்று கொண்டிருந்தான் அவர்கள் புசித்தார்கள் (ஆதி18)

அந்நாளிலே ஆபிரகாம்! கர்த்தருக்கும் இரண்டு புருஷர்களுக்கும் உபசரிப்பாளனாக விளங்கினான். பின்பு அந்த புருஷர் எழுந்து சோதோமுக்கு வந்தார்கள் அந்நாட்களில் ஆபிரகாமும், சாராளும் உபசரித்தது போல கிறிஸ்தவராகிய நாமும்கூட உபசரிக்கும் தன்மையையும், உபசரிக்ககூடிய இருதயத்தையும் பெற்றிருக்க வேண்டும் என எபிரேய ஆசிரியர் புதியஏற்பாட்டில் உணர்த்துகிறார்

மற்றுமொரு சம்பவத்தில், தேவனுடைய தீர்க்கதரியாகிய எலிசா சூனேமிக்குப் போயிருக்கும் போது, அங்கேயிருந்த கனம் பொருந்திய ஒரு ஸ்திரீ அவனைப் போஜனம் பண்ண வருந்திக் கேட்டுக்கொண்டாள், அப்படியே அவன் பயணப்பட்டு வருகிற போதெல்லாம் போஜனம் படி அங்கே வத்து தங்குவான்

"அவள் தன் புருஷனை நோக்கி; இதோ, நம்மிடம் எப்போதும் வந்து போகிற தேவனுடைய மனுசனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன். நாம் மெத்தையின் மேல் ஒரு சிறிய

அறை வீட்டைக்கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும், குத்துவிளக்கையும் வைப்போம்; அவர் நம்மிடத்தில் வரும்போது அங்கே தங்கலாம் என்றாள்" (2இராஜா 4:8-10). இப்படியாக தேவனுடைய மனுஷன் தங்குவதற்கான ஆயத்தங்களை செய்து முடித்தாயிற்று எலிசாவும் அவனுடைய வேலைக்காரனாகிய கேயாசியும் அந்த வழியாக வரும்போதெல்லாம் அந்த மேல்வீட்டறையில் வந்து தங்கி இளைப்பாறுவார்கள்.

எலிசாவின் தீர்க்கதரிசன வாழ்க்கை எளிதானதன்று எலிசாவின் சரீரத் தேவைகள் சந்திக்கப்படவில்லை என்பதையெல்லாம் இந்த சூனேமிய ஸ்திரி அறிந்திருந்தாள் மேலும் அச்சமயத்தில் எலிசாவின் ஜீவனுக்கு பாகால் தீர்க்கதரிசியினால் வரவிருந்த ஆபத்தையும் இஸ்ரவேலில் அவனுக்கிருந்த எதிர்ப்புகளையும், 2 ராஜா 6:1-23 ல் கூறப்பட்டுள்ளபடி சீரியா தேசத்து ராஜா எலிசாவை கொல்லதிட்டமிட்டிருந்ததையும் சூனேமியாள் திட்டமாய் அறிந்து கொண்டாள்.

ஆதலால் எலிசாவின் இந்த இக்கட்டுகளை எளிதாக்கும்படி சூனோமிய ஸ்திரியின் இருதயம் வாஞ்சித்தது எனவே அவள் எலிசா வருகிறபோதெல்லாம் அவனுக்கு உணவு அளித்து ,அவன் தங்கி நன்றாக இளைப்பாறிச் செல்லும்படியாக அவனுக்கு அறையை ஆயத்தப்படுத்தி, அவன் தேவைகளைச் சந்தித்து, விசாரித்தது அவளது உபசரிப்பின் சிறந்த தன்மையையும், அவளது தேவபக்தியையும் காட்டுகிறது.

இந்த சூனோமியாள் தேவபக்தியுள்ளவள் மட்டுமல்ல இவள் சிறந்த உபசரிப்பவளாகவும் விளங்கினாள். ஆனால் ராஜாக்களின் புத்தகத்தை தேவ ஆவியினால் எழுதிய எழுத்தாளர் இவளை கனம் பொருந்திய ஸ்திரி என்று அழைக்கிறார். என்ன அருமையான வார்த்தைகள் இது! இந்த வார்த்தையானது ,தேவகுடும்பத்திலுள்ள ஸ்திரிகளாகிய நாமும் நம்முடைய ஜீவியத்தில் இப்பேர்பட்ட குணாதிசியங்களை காண்பிக்கும்படி வலியுறுத்துகிறது.

இன்னும் என்னவெல்லாம் இந்த சூனேமியஸ்திரியிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளலாம்?. இவள் ஒரு அடக்கமுள்ள அல்லது பணிவுள்ள ஸ்திரீ. எலிசா அவளை அழைத்து இப்படிப்பட்ட சகல சலக்கரணையோடும் விசாரித்து வருகிறாயே,உனக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கூப்பிட்டு கேட்டபோது,அவள் எலிசாவின் அறைக்குள்ளே பிரவேசிக்கவில்லை. அவளைக்கூப்பிட்ட போது அவள் வந்து வாசற்படியிலே நின்றாள் என்று 2 ராஜா 4:15 கூறுகிறது என்ன அருமையான அடக்கம் இது இவளது புத்திசாலித்தனம் அல்லவா! இப்படிப்பட்ட இவளது செய்கையில் இவளது நற்குணங்களை நாம்கண்டுகொள்ள முடிகிறது.

வேலையும் தேவனிடத்திலும், தேவனுடைய மனுஷனாகிய எலிசாவின் வல்லமையிலும் இவள் கொண்டிருந்த நம்பிக்கையை நாம் காணலாம். அந்த பகுதியை எலிசா தங்கினார். சொன்னபடி, ஒரு குறிப்பிட்ட காலத்திட்டத்தில் ஒரு குமாரனைப்பெற்றாள். ஆனால் திடீரென்று ஒருநாள் அவளுடைய குமாரன் சுகவீனமடைந்து மரித்து விட்டான். இந்த குடும்பத்தாள் என்ன செய்தாள்? அழுது புலம்பி துக்கித்தாளா? இல்லை. அவளது கணவன், நீ இன்றைக்கு ஏன்றென்று அவனிடத்துக்குப் போக வேண்டுமென்று என்று கேட்ட போது கூட அவள் எல்லாம் சரிதான், நான் போக வேண்டியிருக்கிறது என்று கூறினாள் 2 ராஜா 4:23. அவள் தன் நம்பிக்கையை இழந்துவிடவில்லை. தன் நம்பிக்கையிலே அசைவில்லாதவளாக இருந்தாள்.

இன்றைய நாட்களிலும் கிறிஸ்தவ சகோதரிகளாகிய நம்மிடையே இப்படிப்பட்டதான பக்திக்குரிய ஜீவியம் காணப்படவேண்டும் நம்மிடையே இப்படிப்பட்ட உபசரிப்பு, சுயநலமற்ற தன்மை, அடக்கம், நம்பிக்கை போன்ற குணாதிசயங்களை மற்றவர்கள் பார்த்தால்அவர்களும், தேவனுடையபாதைக்கு திரும்புவார்கள்.

Betty Burton Choate
U.S.A

Translated by
Glory Arjunan
S. India

MONTHLY MAGAZINE News Paper
WORD OF CHRIST:
Regd No. 84661-92
Registerd No. TN/DDL/19

PRINTED MATTER

TO

If undelivered Please return to

**THE EDITOR**
WORD OF CHRIST
Post Office Box No.5.
Batlagundu- 624 202
S. India Phone (04543)-23278